# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,926 — 1970 ඔක්තෝබර් 2 වැනි සිකුරාද — 1970.9.2**

14,926 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு ஒற்ரேபர் மாதம் 2 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 305 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 306 | விதிச செயற்குழுவின் அறிவித்தல்கள், .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | 307 | நாணுவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

*(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 (2) (அ) ம் பிரிவின் (1) ம் உட்பிரிவினுல் எனக்களிக்கப்பட்ட தத்துவ பலங்களைக் கொண்டு, பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான், திருகோணமலை மாவட்டத்திலுள்ள உப்புவெளி பிரதேசத்துக் கிராமச் சபைக்கு அந்த உட்பிரிவின் கீழ் காணி வரியொன்றை அக்கிராமப் பிரதேசத்தில் விதித்து அறவிடுவதற்கு இவ்வறிவித்தல் மூலம் அதிகாரமளிக்கிறேன்.*

நீல் டி அல்விஸ்,
பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 6. 9 1970.

10-222—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

*(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40அ, 40ஆ ஆகிய பிரிவுகளின் கீழ் பதுளை மாவட்டத்திலுள்ள தென்னக்கும்புறக் கிராமச் சபையினுல் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் நிதியமைச்சரின் இணக்கத்துடன் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினுல் அக்கட்டளைச் சட்டத்தின் 46 ம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களின் தகவலுக்கு அறிவிக்கப்படுகிறது.*

பி. சிறிவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 9.9.1970.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ம் யூன் மீ 2 ந் உ

**எல்.டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்கஅழுத்தகர்.

### தீர்மானம்

பதுளை மாவட்டத்திலுள்ள தென்னக்கும்புறக் கிராமத்தின் கிராமச் சபை (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40அ ஆவது பிரிவின் கீழ் இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசத்துக்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், காணிகள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு 6 வீதமானதும்,

(அ) 1970 ம் ஆண்டு சம்பந்தமாக செப்ரெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய தேதிகளில் அல்லது அவற்றுக்கு முன் இரண்டு சமமான தவணைப் பணங்களாக,

(ஆ) பிந்திய ஒவ்வொரு வருடஞ் சம்பந்தமாகவும் மார்ச் 31, ஜூன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய தேதிகளிற் அல்லது அவற்றுக்கு முன் நான்கு சமமான தவணைப் பணங்களாக

செலுத்தப்படற்பாலதுமான தண்ணீர் வரியொன்றினை 1970 ஆம் ஆண்டிலிருந்து சொல்லப்பட்ட பிரதேசத்துக்குள் விதித்து அறவிடுதற்கு இத்தால் தீர்மானிக்கிறது.

அட்டவணை

பதுளை மாவட்டத்திலுள்ள உடுகிந்தக்காரியாதிகாரியின் பிரிவில் லந்தேகமக் கிராமத்திலுள்ளதும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்குள் உள்ளதுமான பிரதேசம் முழுவதும் :—

மேற்கு : கிராமச் சபை வீதி ஆரம்பிக்கும் இடத்திலிருந்து 900 அடி தூரத்திலுள்ள ஓர் இடத்திலிருந்து ஊவா—பென்ஹெட் வீதியிலிருந்து நடுங்கமுவைக்கு நீட்சிபெற்று வடக்கு நோக்கி ஊவா-பென்ஹெட் வீதியுடன் அவ்வீதி இணையும் சந்திவரைக்கும்; அங்கிருந்து ஒரு நேரான கோட்டினால் குடஓயாவிலுள்ள உமங்கிட அமுனவரைக்கும்; அங்கிருந்து வடக்கு நோக்கி யட்டல எல எனப்படும் அகம் போதி எல, ஊவா-பென்ஹெட்வீதியைச் சந்திக்கும் வரைக்கும்.

வடக்கு : ஊவா-பென்ஹெட் வீதியுடன் யட்டல எல எனப்படும் அகம் போதி எல இணையும் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட எலயின் வலதுகைப்புற வளைவு வரைக்கும்.

கிழக்கு : சொல்லப்பட்ட யட்டல எல எனப்படும் அகம்போதி எலயின் வட எல்லையிலிருந்து தெற்கு நோக்கி நடுங்கமுவை வீதியின் மத்திய கோட்டுக்குச் சமாந்தரமாக வரையப்பட்ட கோட்டுக்கு வலதுபுறமாகத் திரும்பும் வளைவிலிருந்து ஆரம்பித்து கிழக்கு நோக்கி மேற்கெல்லை மூலையிலிருந்து.

தெற்கு : மேலே கிழக்கெல்லையை விபரிப்பதில் குறிப்பிடப்பட்டுள்ள சமாந்தரக் கோட்டின் தென்பகுதி முழுவதும்.

10-214—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

#### 13 ஆம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்க கிராமச் சபைகள் (திருத்தம்) அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 13 (1) ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பலத்தைக் கொண்டு யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அன்ரனி அல்பிறட் யோசேப் ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்துக் காரைதீவுக் கிராமச் சபையின் 8 ஆம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. ஆறுமுகம் சபாபதி அவருடைய தெரிவின் பின்னர், சபைக்கு அறிவிக்காமல் சபையின் அடுத்தடுத்த மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்குச் செல்லவில்லை என்பதை நிச்சயமாய் அறிந்து யாழ்ப்பாண மாவட்டத்துக் காரைதீவுக் கிராம சபையின் 8 ஆம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. ஆறுமுகம் சபாபதி இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து அங்கத்தவர் பதவியை விட்டு நீங்கியுள்ளாரென்று இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

அ. அ. யோசேப்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சிப் பணிமனை,
யாழ்ப்பாணம்,
1970 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ம் திகதி.

9-1084—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

## துணை விதிகள்

### தலவாக்கொல்லை-லிந்துலை நகர சபை

#### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 130 (ஆ), 153 ஆகிய பிரிவுகளின் கீழ் தலவாக்கொல்லை-லிந்துலை நகர சபையால் ஆக்கப்பட்டதும் அக்கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான துணை விதி.

பி. சிறிவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 5 ந உ.

#### துணைவிதி

இதனகத்திருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மனைத்தலங்கள் (255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 130 (ஆ) ஆகிய பிரிவின் கீழ் அறவிடப்படவேதும் 1970 ஜனவரி 29 இன் 14,891 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1970 ஜனவரி 13 ந் திகதி கொண்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதுமான 1970 ம் ஆண்டுக்கான விசேட தண்ணீர் வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

#### அட்டவணை

பின்வரும் மதிப்பீட்டிலக்கங்களைக் கொண்ட மனைத்தலங்கள் :—

1 ம் வட்டாரம்

குட்செட் வீதி : 10.

அட்டன் வீதி : 63, 65, 67, 67/1, 67/2, 67/3, 67/4, 67/5, 69, 69/1, 71, 71/1, 71/2, 71/3, 71/4, 71/5, 71/6, 101, 103, 80/1, 80/2, 80/3, 80/4, 80/5, 80/6, 80/7, 80/8, 80/9, 89/10, 80/11, 80/12, 80/13, 80/14, 80/15, 80/16, 80/17, 80/18, 80/19, 80/20, 80/21, 80/22, 80/25, 80/26, 80/27, 80/28, 80/29, 80/30, 80/31, 80/32, 80/33, 80/34, 80/35, 80/36, 80/37, 80/38, 80/39, 80/40, 80/41, 80/42, 80/43, 80/44, 102, 112.

வாகர்ஸ் வீதி : 25, 25/1, 25/2, 25/3, 31, 31/1, 31/3, 31/4, 31/5, 31/6, 31/7, 31/9, 31/10, 31/11, 31/12, 31/14, 31/15, 31/16, 31/17, 31/18, 31/19, 31/20, 31/21, 31/22, 31/23, 31/24, 31/25, 31/26, 31/27, 31/28, 31/29, 31/30, 35, 45, 45/1, 45/2, 45/3, 45/4, 45/5, 45/6, 24, 24/1.

#### அட்டவணை

தேவசிறிபுர மாவத்தை : 11/1, 25, 25/1, 27, 29, 31, 33, 51, 53, 57, 59, 61, 63, 65, 67, 69, 71, 73, 75, 77, 83, 85, 87, 89, 93, 95, 97 99, 99/1, 101, 103, 107, 109, 111, 115, 119, 121, 125, 127, 129 133, 137, 141, 143, 145, 147, 153, 155, 157, 159, 161, 167, 169, 171, 173, 175, 177, 183, 185, 187, 189, 195, 12.

கொத்மலே வீதி : 185, 187, 189, 191, 195, 197, 199, 201, 201/1, 201/2, 201/3, 201/4, 201/5, 211, 221, 223, 225, 231, 140, 190/7, 200/29, 200/30, 200/36.

3 ம் வட்டாரம்

கேமச்சந்திர மாவத்தை : 11/1, 15/1, 15/2, 15/3, 15/4, 15/5, 15/6, 15/7, 15/8, 15/9, 15/12, 15/13, 15/14, 15/15, 15/17, 15/18, 15/19, 15/20, 15/22, 15/23.

4 ம் வட்டாரம்

தேவசிறிபுர மாவத்தை : 112/50.
நுவரெலியா வீதி : 63, 63/1, 85, 171, 173, 173/1.

5 ம் வட்டாரம்

நுவரெலிய வீதி : இல. 68.

6 ம் வட்டாரம்

நுவரெலியா வீதி : 251, 255, 325, 327/9, 495/1, 212, 230, 230/10, 350/1, 352, 422.

7 ம் வட்டாரம்

நுவரெலியா வீதி : 473, 473/1, 495, 495/12, 495/13, 495/14, 500, 550.

10-212—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

# உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம்
## (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள் அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிப்பிட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டார்களென (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 66 (2) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 25 ந் வ.

அட்டவணை

| வட்டார இலக்கம் | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| | **கொழும்பு மாவட்டம்** |
| | ஹெனரத் கொட கிராமச் சபை |
| 2 .. | ஆரியசேன ஜயலத் |
| | உடுகஹபற்று கிராமச் சபை |
| 3 .. | றணசிங்க டொன் தர்மசேன |
| | **கண்டி மாவட்டம்** |
| | மெததும்பர மெதசியபற்று கிராமச் சபை |
| 9 .. | விக்றமசிங்க முதியன்செலாகே அத்தனாயக்க கெதர கருணாதிலக்க பண்டா |
| | **யாழ்ப்பாண மாவட்டம்** |
| | காரைதீவு கிராமச் சபை |
| 2 .. | கந்தையா பரமநாதர் |
| | மயிலிட்டிக் கிராமச் சபை |
| 6 .. | இராசையா பாலசுப்பிரமணியம் |

10-205—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம்
## (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள் அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிப்பிட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டார்களென (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 25 ந் வ.

அட்டவணை

| வட்டார இலக்கம் | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| | **கொழும்பு மாவட்டம்** |
| | தொம்பே-மாப்பிட்டிகம கிராமச் சபை |
| 8 .. | மாளவி பதிரன்னலாகே கரோலிஸ் பெரேரா |
| | **யாழ்ப்பாண மாவட்டம்** |
| | சாவகச்சேரி கிராமச் சபை |
| 4 .. | வல்லிபுரம் இராசரத்தினம் |
| | **புத்தளம் மாவட்டம்** |
| | ஒத்தர பலாத்த வடக்கு கிராமச் சபை |
| 7 .. | தம்மகெட்டி முதலிகே சலமன் பீரிஸ் |
| | **அனுராதபுரம் மாவட்டம்** |
| | கடவத் கோரளை வடக்கு கிராமச் சபை |
| 18 .. | மெனிக்ரால வெதராலகே கபுரு பண்டா |

10-204—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926

---

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம்
## (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 4 (1) (சீ) பிரிவின் கீழ், 1970, ஒக்ரோபர் 1 இல் இருந்து அவர்களின் பெயர்களுக்கு நேரே காட்டியுள்ள மாவட்டங்களது தேர்தல்கள் உதவி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்களென்று, இத்தால் பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு 7,
1970, செத்தெம்பர், 24.

அட்டவணை

| பெயர் | மாவட்டம் |
|---|---|
| 1. திரு. என். பத்மநாதன் ... | பொலன்னறுவை |
| 2. திரு. டபிள்யூ. டீ. எல். பெரேரா ... | மொனராகலை |

10-149—2.10.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,926